**செ. கு. எண்:003** **நாள் :03.1.2016**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 3.1.2016

16.7.2015 அன்று சென்னை பெருநகர காவல், அரசு ராயப்பேட்டை மருத்துவமனை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. V.பால்ராஜ்;

18.7.2015 அன்று தனிப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. G.நடராஜன்;

21.7.2015 அன்று சென்னை அரசு பொது மருத்துவமனையில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. S.ஷாஜகான்;

24.7.2015 அன்று சேலம் மாநகரம், அழகாபுரம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. P.முத்துசாமி;

தூத்துக்குடி மாவட்டம், தருவைக்குளம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. செல்வம்;

11.8.2015 அன்று புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. J.மார்ட்டின் கென்னடி;

12.8.2015 அன்று சென்னை பெருநகரக் காவல், தனிப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. குணசேகரன்;

5.8.2015 அன்று நாகப்பட்டினம் மாவட்டம், கீழையூர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. V.சிங்காரவடிவேலன்;

6.8.2015 அன்று திருண்ணாமலை மாவட்டம், கண்ணமங்கலம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. அன்பழகன்;

21.8.2015 அன்று சென்னை பெருநகர காவல், தேனாம்பேட்டை போக்குவரத்துப் பிரிவு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. V.கோவிந்தராமன்;

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் போக்குவரத்துப் பிரிவு காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. K.ராஜன்;

26.8.2015 அன்று விருதுநகர் மாவட்டம், வன்னியம்பட்டி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. பொம்மன்;

--- ஆகியோர் உடல்நலக் குறைவால் காலமானார்கள் என்ற செய்தியையும்;

21.7.2015 அன்று கன்னியாகுமரி மாவட்டம், அருமனை காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. மோகன்;

26.7.2015 அன்று சென்னை பெருநகர காவல், நுங்கம்பாக்கம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. V.நடராஜன்;

14.8.2015 அன்று சென்னை பெருநகர காவல், பல்லாவரம் காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. V.முருகன்;

22.8.2015 அன்று வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. N.பலராமன்;

26.8.2015 அன்று திருவள்ளூர் மாவட்டம், பாதிரிவேடு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. R.ரமேஷ்;

18.9.2015 அன்று சென்னை பெருநகரக் காவல், காவல் கட்டுப்பாட்டு அறை, போக்குவரத்துப் பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. R.மகபூப் பாஷா;

–––ஆகியோர் மாரடைப்பால் காலமானார்கள் என்ற செய்தியையும்;

20.7.2015 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டம், சிறுகனூர் காவல் நிலையத்தில் இரண்டாம் நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. R.ஆனந்த்;

22.7.2015 அன்று கடலூர் மாவட்டம், மந்தாரகுப்பம் காவல் நிலையத்தில் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. மனோகர்;

1.9.2015 அன்று விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை தமிழ்நாடு சிறப்புக் காவல் படை 10-ம் அணியில் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. A.வெங்கட்ராஜன்;

26.9.2015 அன்று விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தாலுகா காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. மருதன்;

––– ஆகியோர் சாலை விபத்துகளில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

5.9.2015 அன்று சென்னை பெருநகரக் காவல், வெடிகுண்டு கண்டு பிடித்தல் மற்றும் செயலிழக்க செய்யும் பிரிவில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. பழனி அவர்கள் வீட்டில் மின்சாரம் தாக்கியதில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

பல்வேறு நிகழ்வுகளில் மேற்கண்ட தேதிகளில் உயிரிழந்த இந்த **23** காவலர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், மறைந்த காவலர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**